வ.மா.பொ.சே.ஆ.குழு சுற்றறிக்கை இல : 19/2022

எனது இல.NP/07/10/02/198
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்குமாகாணம்,
யாழ்ப்பாணம்.
2022.06.15.

அமைச்சின் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர் - நிர்வாகம்,
பிரதிப் பிரதம செயலாளர் - பொறியியல் சேவைகள்,
திணைக்களத் தலைவர்கள்,
வடக்கு மாகாணம்.

**வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் Iஆம் தரத்தின் அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2020 (2022)**
(முகாமைத்துவம் தொடர்பான மூன்று மாத சான்றிதழ் பாடநெறி)

வடக்கு மாகாண தொழில்நுட்பவியல் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக, இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவக் கற்கை மற்றும் வர்த்தக பீடத்தினால் **2022, செப்ரெம்பர் மாதம் முதல்,** வார இறுதி பாடநெறியாக 15 வாரங்கள் சனிக்கிழமைகளில் ஆரம்பித்து நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. (i) இப்பாடநெறி ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்தினால் ஆங்கில மொழி மூலம் மாத்திரம் நடாத்தப்படுவதுடன், பாடநெறியின் இறுதியில் ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் இறுதிப்பரீட்சை நடைபெறும். அப்பெறுபேறுகளின் அடிப்படையில் பாடநெறியில் சித்தியடைவது தொடர்பாக தீர்மானிக்கப்படுவதுடன், சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் மேற்படி வினைத்திறமைகாண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்தவர்களாகக் கருதப்படுவர். பாடநெறிக்கு அலுவலர்களைத் தேர்ந்தெடுத்தல், பாடநெறியை நெறிப்படுத்தல், பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல், பாடநெறி சான்றிதழ்களை வெளியிடல் மற்றும் சலுகைக் காலம் வழங்கல் சம்பந்தமாக அப்பீடத்தின் பீடாதிபதியினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பாடநெறியைத் தொடரும் பரீட்சார்த்திகள் கீழ்படிதல் வேண்டும். பல்கலைக் கழகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களை மீறும் பட்சத்தில், இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் விதிக்கப்படும் தண்டனை மற்றும் தாபனக்கோவையின் ஏற்பாடுகள் என்பனவற்றுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

(ii) இலங்கை ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்கள் மற்றும் பாடநெறி சம்பந்தமாக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் பாடநெறியின் ஆரம்பத்தில் தங்களுக்கு அறிவிக்கப்படும்.

3. இப்பாடநெறி தொடர்பாக விண்ணப்பிப்பதற்கான மாதிரிப்படிவம் இவ்வறிவித்தலின் இறுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அம்மாதிரிப் படிவத்திற்கமைய விண்ணப்பதாரி தாமாகவே விண்ணப்பப்படிவம் ஒன்றினைத் தயாரிக்க வேண்டியுள்ளதுடன் **2022 ஜூலை மாதம் 05**ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு **செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம், இல: 393/48, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.** எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவமானது அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில், **"வடக்கு மாகாணத் தொழில் நுட்பசேவையின் 1 ஆம் தரத்தின் அலுவலர்களுக்கான மூன்றாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை – 2020 (2022)" (முகாமைத்துவம் தொடர்பான மூன்று மாதசான்றிதழ் பாடநெறி)** எனக் குறிப்பிடப்படல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களை எவ்வித விசாரணையுமின்றி நிராகரிப்பதற்கு செயலாளருக்கு அதிகாரமுண்டு.

4. **ஆளடையாளத்தைஉறுதிப்படுத்தல் :-**

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தகபீடத்தின் பீடாதிபதி திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை விண்ணப்பதாரர்கள் உறுதிப்படுத்துதல் வேண்டும். அது தொடர்பாகக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றை பாடநெறியின் ஆரம்பத்தில் அல்லது பாடநெறி கால எல்லையினுள் முன்னளித்து ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு விண்ணப்பதாரர்கள் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை:
(ஆ) தமது நிறுவனத்தினால் வழங்கப்பட்ட கடமை அடையாள அட்டை :

**அல்லது**

தமது நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஆளடையாளத்தை உறுதிசெய்யக்கூடிய ஆவணம்.

5. **விண்ணப்பம் :-**

(i) விண்ணப்பப் படிவமானது ஏ4 (A4) அளவுடைய தாளில் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்தை கணினியில் தயாரித்துக்கொள்ள முடியுமாக இருந்தபோதிலும், அது சரியாகவும் நேர்த்தியாகவும் விண்ணப்பதாரியின் சொந்தக் கையெழுத்தினாலேயே நிரப்பப்படல் வேண்டும். விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மாத்திரம் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள மொழியில் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அலுவலர்களின் பெயர் பாடநெறியின் சகல சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தப்படுவதன் காரணமாக அது தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். ஏதேனும் ஒரு வகையில் பாடநெறிக் காலத்தினுள் அதில் மாற்றமேற்படும் பட்சத்தில், அதுபற்றித் திணைக்களத் தலைவரின் சிபார்சுடன் எழுத்து மூலம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பீடாதிபதி, முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்திற்கு அறிவித்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பம் தயாரிக்கும் போது அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர், சிங்கள மொழி மூல விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ்மொழி மூல விண்ணப்பங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்தினை ஒத்திராத விண்ணப்பங்களும், முழுமையான தகவல்களைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பங்களும் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரியினால் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பமானது, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தினை ஒத்திருக்கின்றதா என்பது தொடர்பில் உறுதிப்படுத்திக்கொள்ளும் பொறுப்பு விண்ணப்பதாரியினுடையதாகும். **பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை இரு நிழற்பிரதிகள் எடுத்து, ஒன்றை விண்ணப்ப படிவத்துடன் இணைத்து எமக்கு அனுப்பி வைப்பதுடன் ஒன்றைத் தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.**

(iii) விண்ணப்பதாரி விண்ணப்பத்தின் வலதுபக்கமேல் மூலையில் தரப்பட்டுள்ள கூட்டினுள் தபால் முத்திரை ஒன்றின் அளவிலான வர்ணப் புகைப்படம் ஒன்றினை கழராதவாறு ஒட்டுதல் வேண்டும். அத்துடன், **தபால் முத்திரை ஒன்றின் அளவிலான மேலுமொரு வர்ணப் புகைப்படம் ஒன்றினை விண்ணப்பத்துடன் (ஒட்டாது)** இணைத்து அனுப்புதல் வேண்டும்.

6. **பாடநெறிக் கட்டணம் மற்றும் பரீட்சைக் கட்டணம் :-**

(i) இப்பாடநெறியைத் தொடரவுள்ள அலுவலர்கள் ***17,500*** ரூபா தொகையை **மக்கள் வங்கி, கங்கொடவில** கிளையில், ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பீடத்தின், கணக்கு இல. *033530003384* எனும் பெயருக்கு அலுவலர் பணியாற்றுகின்ற நிறுவகத்தின் மூலம் காசோலையாகவோ, வங்கிவரைவாகவோ, குறித்த விண்ணப்பதாரியினால் குறிப்பிட்ட தொகையை வைப்பிலிட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பதாரியின் தேசிய அடையாள அட்டையின் பிரதி ஒன்றுடன் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பீடாதிபதி, முகாமைத்துவ கற்கை மற்றும் வர்த்தக பிரிவிற்கு பாடநெறி ஆரம்பிப்பதற்கு ஒருவாரத்திற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும். அதில் தாபனக் கட்டணங்கள், அச்சுக் கட்டணங்கள், பரீட்சைக் கட்டணங்கள், வளவாளர்களுக்கான கட்டணங்கள், ஒருங்கிணைப்புக் கட்டணங்கள் ஆகியன உள்ளடங்குகின்றன.

(ii) எவ்வாறாயினும், ஆரம்பத்தில் பாடநெறிக்கு உரிய பரீட்சையில் சித்தியடையத் தவறும் பட்சத்தில், அதன் பின்னரான தவணைகளில் அலுவலர்கள் பரீட்சைக்குத் தோற்றும்போது, *1,000* ரூபா பரீட்சைக்கான பதிவுக் கட்டணமாகவும், *2,000* ரூபா பரீட்சைக் கட்டணமாகவும் செலுத்துதல் வேண்டும். ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கை மற்றும் வர்த்தக பீடாதிபதியின் ஆலோசனைகளுக்கமைய அக்கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும்.

(iii) எச்சந்தர்ப்பத்திலும் இப்பாடநெறிக்காக அறவிடப்பட்ட தொகை மீளளிக்கப்படமாட்டாது. இப்பரீட்சைக்குச் செலுத்தப்பட்ட கட்டணம் வேறு எந்தவொரு பரீட்சை அல்லது பாடநெறி தொடர்பாகவோ அல்லது வேறொரு அலுவலருக்கோ மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

7. **பாடநெறியைத் தொடர வேண்டிய தேவைப்பாடு :-**

(i) வடக்கு மாகாணத் தொழில்நுட்பவியல் சேவையின் *1* ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டு ஐந்து *(5)* ஆண்டுகளைக் கடப்பதற்கு முன்னர் சகல அலுவலர்களும் வடக்கு மாகாணத் தொழில்நுட்பவியல் சேவையின் 3வது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ii) Iம் தரத்துடைய அலுவலர்களுக்கு மேலதிகமாக இரண்டாம் வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சையினை சித்தியடைந்த அலுவலர்களும் மூன்றாம் வினைத்திறமைகாண் தடைதாண்டல் பரீட்சைக்குரிய பாடநெறியை பூரணப்படுத்த முடியும்.

** குறிப்பு :-

திணைக்களத் தலைவரினால் அந்தந்த அலுவலர்களின் சேவைமூப்பு மற்றும் பிரிவு 7(i), 7(ii)ஆம் பந்திகளின் விடயங்கள் சம்பந்தமாக அவதானம் செலுத்தும்படி தயவுடன் அறியத்தருகின்றேன்.

8. பாடநெறிக்கு தெரிவு செய்யும் முறை :-

வடக்கு மாகாணத் தொழில்நுட்பவியல் சேவையின் 1 ஆம் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்ட அலுவலர்கள் அத்தரத்தில் அமர்த்தப்பட்ட சேவை மூப்பின் ஒழுங்குமுறைக்கமைய, பாடநெறி தொடர்பாக அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கும் போது முன்னுரிமை அளிக்கப்படும்.

9. விண்ணப்பங்களை அனுப்பியுள்ள சகல அலுவலர்களும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கை மற்றும் வர்த்தகபீடத்தினால் பேணப்பட்டு வருகின்ற தரவு முறையினுள் உள்வாங்கப்படுவதுடன், ஒரு வருடத்தில் 400 உத்தியோகத்தர்களைக் கொண்ட ஒரு குழு மாத்திரம் இப்பாடநெறியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். பாடநெறிக்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் பெயர்ப்பட்டியல் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படுவதுடன் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் தெரிவு செய்யப்படும் அலுவலர்களுக்கு அது தொடர்பாக அறிவிக்கப்படும். **அவ்வாறு அறிவிக்கப்பட்டதன் பின்னர் கலந்துகொள்ளாத விண்ணப்பதாரிகளுக்கு பல்கலைக்கழகத்தின் மூலம் மீண்டும் அறிவிப்பதற்கான கடப்பாடு இல்லை என்ற வகையில் அது அலுவலர்களுக்கு உரித்தான ஒரு சந்தர்ப்பம் என்ற வகையில் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.**

10. பாடநெறி தொடர்பான பாடத்திட்டம் :-

| தொ. இல | பாடத்திட்டம் | கிரடிட் எண்ணிக்கை | கிரடிட் மணித்தியாலங்கள் |
|---|---|---|---|
| 1. | அரசாங்க நிதி முகாமைத்துவம் | 02 | 30 |
| 2. | மனிதவள முகாமைத்துவம் (மூலக் கோட்பாடு) | 02 | 30 |
| 3. | பிரச்சனை தீர்த்தல் முகாமைத்துவம் (நிறுவனத்தின் நோக்கங்கள், குறிக்கோள்களை அடைந்துகொள்ளும் போதான பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் கோட்பாடுகளின் நடைமுறைப் பயன்பாடு) | 02 | 30 |
| 4. | நிறுவன நடத்தை | 02 | 30 |
| 5. | செயற்திட்ட அறிக்கை:- தத்தமது தொழிற்துறை சம்மந்தமாக முகம்கொடுக்க நேரிடுகின்ற பிரச்சனை. **அல்லது** தொழில்துறை தொடர்பான ஆய்வுக் கட்டுரை | 02 | 30 |
| | | **10** | **150** |

11. இவ்வறிவித்தலின் ஏற்பாடுகளில் குறிப்பிடப்படாத எவ்விதவிடயம் சம்பந்தமாகவும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்படுகின்ற அறிவித்தலின் பிரகாரம் வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுச் செயலாளரின் தீர்ப்பே இறுதியானதாகும்.

12. இச்சுற்றறிக்கையின் தமிழ் மற்றும் சிங்கள மொழிப்பதங்களிடையே ஏதேனும் வேறுபாடு நிலவின் தமிழ்மொழி மூலச் சுற்றறிக்கையே மேலோங்கும்.

சி.திருவாகரன்,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.
2022.06.15

சி.திருவாகரன்
செயலாளர்
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
வடமாகாணம்

பிரதி:-

01. பிரதம செயலாளர், பிரதம செயலாளர் செயலகம், வ.மா - தகவலுக்காக